# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
மார்கழி 1
முஹர்ரம் 4
வெள்ளி (16-12-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 55
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60




## அகதி நிவாரண பண மோசடி; நான்கு சிங்களவர்

# கையும்மெய்யுமாகபிடிபட்டனர்

## யாழ். அரசாங்க அதிபர் திகைப்பு

### சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**இனக்கலவரத்தின்போது உண்மையாகப் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நிவாரணநிதி கிடைக்காமற் கலங்கி நிற்க, எந்தவித பாதிப்புக்குமுட்படாத சிங்களவர்கள், தமிழ் அகதிகளுக்கென் வெளிநாடுகள் வழங்கியுள்ள நிதி உதவியை தாம் ஆதிக்கம் செலுத்தும் இனம் என்ற திமிருடன் வந்து நாள் தோறும் அள்ளிச்செல்லும் அக்கிரம நிகழ்ச்சிகள், யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. இந்த அநீதி கண்டு பாதிக்கப்பட்ட தமிழர்கள் பொறுமை இழந்துவருகின்றனர்.**

இதே வேளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 11-12-77 யாழ் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சிங்களவர்களுக்கு அரசாங்க உதவிப்பணம் வழங்கப்பட்டபோது, ஒன்றுக்குமேற்பட்ட தடவை பணம் எடுக்க முயற்சித்த நான்கு சிங்களவர்கள் கையும்மெய்யுமாக பிடிபட்டனர். இவர்களை பிடித்த தமிழ் அதிகாரிகள் இவர்களை பொலிசாரிடம் ஒப்படைக்குமுன்னர், இவர்கள் நால்வரும் யாழ் அரசாங்க அதிபரிடம் ஓடிச்சென்று அடைக்கலம் புகுந்ததாகவும் இதையடுத்து திகைப்பும் திகிலுமடைந்த அதிபர், பணம் வழங்குவதை உடனடியாக நிறுத்தும்படி உத்தரவிட்டதாகவும் தெரியலருகிறது.

கடந்த ஆகஸ்ட் இனக்கலவரத்தின் போது, வீடு வாசல்களையும், சொத்துக்களையும், கடைகண்ணிகளையும் இழந்து, உயிர்ப் பலிகளுக்கு ஆளாகி அகதிகளாக்கப்பட்டு தெருவீதியிலே விரட்டப்பட்டவர்கள் அனைவரும் தமிழர்களே என்பது நாடறிந்த சங்கதி. யாழ்ப்பாணத்திலும்சரி, தமிழ் ஈழத்தின் ஏனைய பகுதிகளிலும் சரி ஒரு சிங்களக் குடும்பம் என்றாலும் பாதிக்கப்படவில்லை. எந்த ஒரு சிங்களக் குடும்பத்துக்கும் தமிழர்கள் எந்த ஒரு சிறு துன்பம்தானும் விளைக்க வில்லை. போதாக் குறைக்கு சிங்கள அரசின் பொலிசும், இராணுவமும், தமிழ் பகுதியில் இருந்த சிங்களவர்கள் மீது ஓர் ஈ எறும்புகூட விழாமல் பாதுகாப்பு அளித்தன.

ஆனால் இன்று பாதிக்கப்பட்ட மக்களுக்காக வெளிநாடுகள் வழங்கிய உதவி நிதியை இலங்கை அரசு பங்கீடு செய்யும்போது, அதுவும் பாதிக்கப்படாத சிங்கள மக்களுக்கே போய்ச் சேருகிறது. ஏனெனில் அகப்பை பிடிப்பவர்கள் அவர்களது இனத்தினர் அல்லவா? தாம் ஆளும் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஆணவத்துடன் யாழ்ப்பாண அரசாங்க அலுவலகங்களில் புகுந்து சிங்களவர்கள் நெஞ்சை நிமிர்த்தியபடி உதவிப் பணத்தைப் பெற்றுச் செல்கின்றனர். "வருகின்ற சிங்களவர்களுக்கெல்லாம் ஏனென்று கேட்காமல் கொடு" என்று மேலேயிருப்பவர்கள் சொன்னால் கீழேயிருப்பவர்கள் அதைக் கேட்டுத்தானே யாகவேண்டும்?

—8-ம் பக்கம் பார்க்க

## அமைச்சர் வரவேற்புக்களிலும் விருந்துகளிலும் கூட்டணிபா.உ.கள் பங்குகொள்ள மாட்டார்கள்!

தமிழ் ஈழத்திற்கு வருகை தரும் சிங்கள அமைச்சர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பு உபசாரங்களிலும், மாலை மரியாதை நிகழ்ச்சிகளிலும் விருந்து வைபவங்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி பா- உ.க்கள் பங்குபற்றமாட்டார்கள். தொகுதி தேவைகள், அபிவிருத்தி. வேலைகள் சம்பந்தமான அமைச்சரின் உத்தியோக பூர்வமான நிகழ்ச்சிகளில் மட்டும் அந்தந்தத் தொகுதி கூட்டணி பா. உ.க்கள் பங்குபற்றுவார்கள்.

இந்த முடிவை கூட்டணியின் நடவடிக்கைக் குழு ஏற்கெனவே எடுத்திருப்பது தெரிந்ததே.

## பிரிவினை தடைச் சட்டத்தை எதிர்த்து

# லண்டன் தமிழர் ஆர்ப்பாட்டம்!

### தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு எழுச்சிக் குரல்!

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமது சொந்த தமிழ்ஈழ அரசை மீள அமைத்து தம்மைத் தாமே ஆள்வது என்று 1977 பொதுத்தேர்தலில் ஈழத் தமிழ் தேசிய இனம் எடுத்த ஜனநாயக முடிவை பலாத்காரமாக நசுக்குவதற்கு இலங்கை அரசாங்கம் கொண்டுவர விருப்பதாக சொல்லப்படும். அடக்குமுறைச் சட்டங்களை கண்டித்தும்; அத்தகைய சட்டங்களை கொண்டுவந்து தமிழ் தேசிய இனத்தின் விடுதலை அபிலாஷைகளை ஏறி மிதித்து அமுக்க முயற்சிக்காமல் தமிழ் ஈழத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் சிங்கள அரசு, உடனடியாக தமிழ் ஈழத்திலிருந்து சமாதானமாக வெளியேறி தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ அனுமதிக்கவேண்டுமென்றும், இது விஷயத்தில் ஐ. நா. சபை தலையிடவேண்டுமென்றும் வலியுறுத்தி லண்டனில் ஐ. நா. சபை அலுவலகத்தின் முன்னர் லண்டனிலுள்ள ஈழத்தமிழ் இளைஞர்கள் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு, ஈழத்தில் நடைபெறும் சிங்கள இனவெறிக்கொடுமையை உலக அரங்கின் முன் எடுத்துக்காட்டும் நோக்குடன் இந்த ஆர்ப்பாட்டம்9-12-77 வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தை லண்டன் ஈழ விடுதலை இயக்கத்தினர் முன்னின்று நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தையொட்டி ஈழ விடுதலை இயக்கம் வெளியிட்டிருந்த துண்டுப் பிரசுரத்தில் "படித்த சிங்கள அரசியல் வாதிகள் சிங்கள சிறிலங்கா ஆட்சியைக் கைப்பற்ற ஒவ்வொரு முறையும் தமிழர்களாகிய எம்மை பலிக்கடா ஆக்குகிறார்கள், சிறீலங்காவில் தமிழர்களின் மனிதஉரிமைக்கு சாவு மணியடிக்கும் அநீதியை உலகுக்கு எடுத்துக் காட்ட லண்டன் வாழ்தமிழர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்" என்று குறிப்பிட்டிருந்தது. (மேலும் ஆர்ப்பாட்ட விபரங்கள் லண்டனிலிருந்து கிடைத்ததும் சுதந்திரனில் வெளியிடப்படும்.)

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே. இராசதுரை,
கொழும்பு 12

கே: நீதியை நிலைநாட்டுவதில் எல்லாளனைப் போன்றவர் இன்றைய நீதியமைச்சர் என்று திரு. தேவநாயகத்துக்கு கல்வியமைச்சர் நிசங்கா விஜயரத்தின புகழாரம் சூட்டியிருக்கிறாரே?

ப: நீதியை நிலைநாட்டிய அந்த எல்லாளனையே ஒழித்துக்கட்ட துட்டகைமுனுவின் தலைமையில் கிளம்பியவர்கள் சிங்களவர்கள். அத்தகையவர்கள் மத்தியில் போய்ச் சிக்கிக்கொண்டிருக்கும் திரு. தேவநாயகத்துக்காக நான் அனுதாபப்படுகிறேன்!

கே: பொத்துவில் கனகரத்தினத்தை சுதந்திரன் அவசரப்பட்டு தாக்கிவிட்டதாக தினசரியார் கண்ணீர் வடித்திருக்கிறாரே — பார்த்தீர்களா?

•

ப: சுதந்திரனைப் பொறுத்தவரை கொள்கையும் இலட்சியமும் தான் பெரிது. அதை மீறுகிறவர்கள் யாராக இருந்தாலும்— அவர்கள் எவ்வளவுதான் பெரியவர்களாக இருந்தாலும் — அவர்களை மக்கள் முன் அம்பலப்படுத்த சுதந்திரன் கிஞ்சிற்றும் தயங்காது. தனிப்பட்ட முறையில் யாரையும் தாக்குவதோ யாருக்கும் துதிபாடுவதோ சுதந்திரனின் கொள்கையல்ல. சுயாட்சிக்கழக நவரத்தினத்தை இயக்கத்திலிருந்து பிரித்தெடுத்து இன்று அவரை அரசியலில் தனிமரமாக்கி ஒழித்துக்கட்டியதும், மட்டக்களப்பு முதல்வரை அரசியலில் பாழடிக்க முயற்சிப்பதும், பொத்துவில் கனகரத்தினம் இன்று பாதை தவறியதற்கும் தினசதியாரின் சூழ்ச்சிகளே மூல காரணம் என்பதை நாம் அறிவோம். இட்போது திருகோணமலை சம்பந்தனுக்கும், பட்டிருப்பு கணேசலிங்கத்துக்கும், மட்டக்களப்பு இராசதுரைக்கும் 'ஐஸ்' வைத்தும், ஆசைகாட்டியும் ஐக்கியதேசியக் கட்சியுடன் அவர்களை அங்கமாக்கி, கிழக்கு மாகாணத்தையும், வடமாகாணத்தையும் முற்றுகப் பிரித்துவிட தினசதியார் நாள்தோறும் கொட்டிவரும் நச்சுக்கருத்துக்களையும் நாம் அறிவோம். ஆனால் கிழக்கு மாகாணத்து பா.உ.க்கள் பொத்துவில் கனகரத்தினம்போல அரசியலில் அரிச்சுவடி தெரியாதவர்கள் அல்ல; ஆகவே தினசதி-யூ. என். பி. —கூட்டுச் சதியில் அவர்கள் சிக்கிவிடமாட்டார்கள் என்று எதிர்பார்ப்போம்! அ ர்கள் அப்படி விழுவதற்கு கிழக்கு மாகாணத்திலுள்ள இயக்கக் காளைகள் அனுமதிக்கவும் மாட்டார்கள்!

ஃ

க. அழகையா,
சம்பூர்,
கூனித்தீவு.

கே: த. வி. கூட்டணியில் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்கள் வெற்றி பெருததின் காரணம் என்ன?

•

ப: முஸ்லிம் ஐக்கிய முன்ன . போதிய வளர்ச்சி பெருததும், தமிழ் ஈழக் கொள்கைபற்றி முஸ்லிம்களுக்கு போதிய அளவு தெளிவு ஏற்படாமையும், ஐக்கிய தேசியக்கட்சி மயக்கமுமே காரணம்!

ஃ

பு. யூகேந்திரராசா,
சம்பூர்,
கூனித்தீவு.

கே: தற்போதைய நிலையில் தமிழர் விடுதலைக்கூட்டணி பேரவை உறுப்பினர்களின் போக்கில் தமிழ் இளைஞர்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுவருவது போல தோன்றுகிறதே? இது ஏன்?

ப: தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ.க்கள், தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிப்படி விடுதலை இயக்கத்தை நடத்தவேண்டும்; விடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். முப்பது ஆண்டுகளாக பாராளுமன்றத்தில் திரும்பத் திரும்பப் பேசிப் பேசி எதையுமே சாதித்துவிட முடியவில்லை. எனவே கூட்டணி பா. உ.க்கள் பாராளுமன்ற இயக்கத்தைக் குறைத்து, விடுதலை இயக்கத்துக்கு தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது இளைஞர்கள் மத்தியில் எந்த அவநம்பிக்கையும் தோன்றுவதற்கு அறவே இடமில்லை!

ஃ

ம. கோசலா,
திருக்கோவில்

கே: தமிழ்ஈழம் அமைத்து விழாக்கொண்டாட கனவு கண்டேன் இது விரைவில் நனவாகுமா?

ப: இந்தக் கனவு நனவாகாவிடின், ஈழத்தில் தமிழினமே அழிந்து விடும். ஆனல் உங்கள் தொகுதி இரண்டாவது பா. உ. இப்போது மாவட்ட மந்திரி கனவு காணத் தொடங்கி விட்டாரே!

கே: மட்டுநகர் காசி அண்ணன் தோற்ற தினத்திலிருந்து கவலையில் ஆழ்ந்த நான் இன்னும் மீளவில்லை. இதற்கு ஒரு ஆறுதல் கூறுங்கள்!

ப: ஒரு விடுதலை இயக்கத்தில் தோல்விகளைத் திரும்பிப் பார்த்து மனம் கலங்கிக் கொண்டிருக்க முடியாது தோல்விக்கான காரணங்களை கணக்குப்போட்டபடி; வெற்றிக் கானபடியில் சரியாகக் காலை வைக்க வேண்டுமே தவிர தோல்விகளைத் திரும்பிப் பார்த்துக் கலங்கிக் கொண்டிருக்கக்கூடாது!

ஃ

தி. உதயசூரியன்,
தொல்புரம் கிழக்கு.

கே: ஆகஸ்ட் மாத பிற்பகுதியில் நடந்த சிங்கள வெறியாட்டத்துக்குப் பின்னும் தமிழ்நாடு எதற்கு என்று கேட்பவர்களைப் பற்றிஎன்ன கூறுகிறீர்கள்?

ப: சிங்களக் கொடுமைக்குள்ளானவர்கள் அனைவரும் தமிழ்நாடு அவசியம் என்ற முடிவுக்குவந்துவிட்டார்கள். கொடுமைகளுக்கு தப்பியவர்களே அப்படிக்கேட்கிருர்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் அடிவிழும்போதுதான் தமிழ் நாட்டின் எண்ணம் உருவாகும்.

ஃ

வி. ஆர். சிவானந்தன்,
சுணவரலை தோட்டம்.
நமுனுகலை.

கே: நம் தமிழ் இனத்தில் எட்டப்பர் கூட்டம் இருக்கிறதே — அதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: விடுதலைப் போராட்டம் வேகமடையும்போது எட்டப்பர் கூட்டத்தை மக்களே கவனித்துக்கொள்வார்கள்; அதுபற்றிய கவலையை விடுங்கள்! கட்டபொம்மன்களை நாடு முழுவதும் உருவாக்குங்கள்!

ஃ

விடிவெள்ளி,
கொச்சிக்கடை.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ.களில் உங்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர் யார்?

ப: தமிழஈழ இலட்சியத்துக்காக அந்தரங்க சுத்தியுடன் உழைக்கும் அனைவரையும் எனக்குப் பிடிக்கும்!

ஃ

செ. தேவேந்திரா,
சிறுப்பிட்டி மேற்கு

கே: சிங்கள மக்களை மகாவலி கங்கை பாயும் தரிசு நிலங்களில் குடியமர்த்தச் சொல்லும் பிரதமர், அதே போல தமிழ் அகதிகளை தமிழ் பிரதேசங்களில் குடியமர்த்த தடுப்பதேன்?

ப: தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூறுவது போல "பாரம்பரிய தமிழ் பிரதேசம்" என ஒன்று கிடையாதென்றும், இலங்கையை சிங்கள நாடு, தமிழ் நாடு என்று பிரிக்க முடியாதென்றும், இந்தக் கொள்கையில் தாம் யாருக்கும் வளைந்து கொடுக்கப்போவதில்லை என்றும், கலவரத்தினால் தமிழ் பிரதேசத்துக்கு தமிழ் அகதிகள் ஓடிவந்தால், அது அவர்களின் தாயகமாகி விடாது என்றும், தமது 'தர்மிஷ்ட' தத்துவங்களை — ஒவ்வொன்ருக தேசிய அரசுப்பேரவையில் அவிழ்த்து விட்டிருக்கிருரே ஜே. ஆர். — நீங்கள் படிக்கவில்லையா?

ஃ

சி. வசந்தகுமாரன்,
க.பொ.த (உயர்தரம்)
யூனியன் கல்லூரி
தெல்லிப்பளை.

கே: அன்று நாட்டின் தேவைகளை முன்னிட்டு தமிழ்ப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்த ஐக்கிய முன்னணி அரசாங்க மந்திரிமார்கள் பங்குபற்றும் கூட்டங்களிலோ, விழாக்களிலோ தமிழ் மக்களைக் கலந்து கொள்ள வேண்டாம் என்று கூறியதுடன், அவர்களுக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்த அதே தலைவர்கள் இன்று ஐக்கிய தேசியக்கட்சி மந்திரிமார்களின் கூட்டங்களில் பங்குபற்றி அத்துடன் நின்றுவிடாமல் விருந்துபசாரத்திலும் கலந்துகொள்வது பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: முந்திய ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கூட்டணி பா. உ.க்களையே 'அதிகாரமற்ற எம். பீக்கள்' ஆக்கி தமிழ்ப் பகுதிகளில் ஆட்சி நடத்தியது. இப்போதைய ஐ.தே. கட்சி ஆட்சி இந்த நிமிடம் வரை மக்களால் தெரிந்து எடுக்கப்பட்ட பா. உ.க்களுக்கு ஓரளவு மரியாதையும் கௌரவமும் அளித்து வருகிறது. இது முந்திய அரசுக்கும் இன்றைய அரசுக்கு மிடையேயுள்ள ஒரு வேறுபாடு, ஆனல் அடிப்படையில் முந்திய அரசும் சிங்கள ஏகாதிபத்தியம் தான்; இன்றைய அரசும் சிங்கள ஏகாதிபத்தியம்தான்! தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு விடுதலை இயக்கம் என்ற அளவில் சிங்கள ஏகாதிபத்திய அமைச்சர்களின் வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் விருந்துகளிலும் கலந்து கொள்வதையும் தவிர்த்துக்கொள்ளத் தான் வேண்டும். அதே சமயம், 'பா.உ' என்ற அளவில் தமது தொகுதிக்கான தேவைகளை அமைச்சரிடம் எடுத்துரைப்பது தவருகாது.

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

---

# சுயமரியாதையுள்ள தமிழர்களுக்கு ஜே. ஆர். அல்ல, அமிரே தலைவர்

## பொத்துவில் தொகுதி கனகரத்தினத்துக்கு ஒரு கடிதம்!

திரு. ம. கனகரெத்தினம் அவர்கள்.
பொத்துவில் தொகுதி
இரண்டாவது பா. உ.
பொத்துவில்.

அன்புள்ள ஐயா,

ஈழம் வாழ் தமிழ் இனம் சுயநிர்ணய உரிமையுடன் இந்த நாட்டில் வாழவேண்டும். இதற்காக எவ்வித இன்னல் ஏற்படினும் ஏற்றுக்கொள்ளவேண்டும்; என்னும் இலட்சியப் பற்றுக் கொண்டவன் நான். ஆகையினுல் தங்கட்கு இக் கடிதத்தை எழுதுகின்றேன்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தங்களைப் பொத்துவில் தொகுதிக்கு வேட்பாளராக நிறுத்தியது. ஆகவே அதன் உறுப்பினராகிய எனக்கு தங்களை ஆதரிக்கவும் கூட்டணிக்காக வாக்குகளைச் சேகரிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதன் நிமித்தம் வாக்குகளைக் கோரி பொதுமக்களுடன் தாங்கள் தொடர்பு கொண்டபோதும், வீடு வீடாக திருக்கோவில்—கன்னியந்தீவு—விஞயக புரம்—திருப்பதி–தங்க வேலாயுதபுரம் போன்ற கிராமங்களில் மக்களைச் சந்தித்து வாக்குக் கேட்கும் போதும் உதய சூரியன் கொடியைக் காட்டியும், அமரர் தந்தை செல்வாவின் பெயரைச் சொல்லியும் வாக்குக்கேட்டது; உங்களுக்கு மறந்து விட்டதா?

"இது உங்கள் கொடி தந்தை செல்வாவின் கட்சிக் கொடியைக் காப்பாற்றுதற்காகவும், அதன் இலட்சியத்தை அடைவதற்காக தந்தையின் நினைப்பை நிறைவேற்றுவதற்காகவும் பாடுபடுவேன்" என்று கூறித் தான் வாக்குகளைக் கேட்டீர்களேயன்றி வேறு எந்த விதத்திலுமல்ல, இத்தனைக்கும் மேலாக அமரர் தந்தை செல்வாவின் சமாதியில் தாங்கள் செய்த சத்தியப் பிரமாணத்தை நினைவுகூர்ந்து பாருங்கள்.

"உங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்கு உங்களுக்காக அல்ல. கூட்டணிக்காக அளிக்கப்பட்டவை என்பதைத் திடமாகக் கூறுகிறேன். நிலைமை இப்படியிருக்கும்போது பொத்துவில் தொகுதி மக்கள் பிரதமர் ஜே. ஆர். அவர்களின் தலைமையை ஏற்றுக் கொள்கிருர்கள் என்றும் ஐ.தே.க, தமிழர்கட்கு நன்மை செய்யும் என்றும் ஐ. தே. கட்சியையும் அதன் தலைவரையும், அரசாங்கத்தையும் புகழ்ந்து வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது பேசியதாக வானொலிமூலமும், பத்திரிகை மூலமும் அறிந்து மிகுந்த வேதனையடைந்தேன். கிழக்கு மாகாணத்திலுள்ள சுயமரியாதையுள்ள எந்தத் தமிழனும் தளபதி அண்ணர் அமிர்தலிங்கம் அவர்களைத் தான் தலைவராக ஏற்றுக் கொள்வான், ஏற்றுக் கொண்டிருக்கிருனேயன்றி தாங்கள் கூறுவதுபோல தமிழினத்தைப் பூண்டோடு அழிக்க முனையும் எந்தச் சிங்களத்தலைவரையும் அல்ல என்பதை உங்கள் போன்ற கனவான்களுக்கு நான் சொல்லவேண்டி ஏற்பட்டதையிட்டு வருந்துகிறேன்.

—சி. அரசரெத்தினம்

திருக்கோவில்,
6.12.77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய புதை பொருளாய்வுகள் போதும்!

# புதிய புதைகுழிகள் தோன்ருமல் தடுப்போம்!

# தமிழின அழிவைத்தடுத்திட தமிழ்நாடே விழித்தெழு!

## உலகத் தமிழ் பண்பாட்டு முதல் மாநாட்டில் பொதுச்செயலாளர் எழுச்சியுரை!

"குடியேறிய நாடுகளில் இன்று எஞ்சியுள்ள தமிழ்ச் சந்ததியினரை யாவது நாம் காப்பாற்றியாக வேண்டும். இத்துறையில் தாய்த்தமிழகம் செய்திட்ட பங்கு என்ன என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். அகநானூறு, புறநானூறு, தொல்காப்பியம், இதிகாசம் இவற்ருேடு, புதையுண்ட ஹரப்பா, மொகஞ்சதாரோ நாகரிகப் புதைபொருளாராய்ச்சியுடன் காலத்தையும் விரயமாக்கி வருகிருர்கள். பழைய புதைபொருள்களை அகழ்வாராய்வு செய்யும் அதே சமயத்தில் புதிய புதைகுழிகள் பல உருவாகிறான என்பதை மறந்து விடக்கூடாது. எனவே தமிழக அறிஞர்களே! முதலில் அனைத்து உலகிலும் நடந்துவரும் தமிழின் அழிவைத்தடுக்க உதவுங்கள்! உங்கள் பார்வை கரிபியன் கடல்வரை செல்லட்டும்!"

மேற்கண்டவாறு சென்னையில் இப்போது நடைபெறும் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் முதலாவது மாநாட்டில் இயக்கத்தின்நோக்கத்தைவிளக்கி உரையாற்றிய குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. கனகரத்தினம் அவர்களே இந்த இயக்கத்தின் நிறுவனராகவும் பொதுச் செயலாளராகவும் விளங்குகிருர்.

திரு. கனகரத்தினம் தமது உரையில் குறிப்பிட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:

எமது இயக்கம் 1974ம் ஆண்டு தைத் திங்கள் 8ம் நாள ஈழத் தமிழகத்தின் பெருநகரான யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

19ம்நூற்ருண்டின் ஆரம்பகாலத் தமிழர் புலப்பெயர்ச்சி, தமிழக வரலாற்றில் கறை படிந்த ஒரு சோக நிகழ்ச்சியாகும். இந்த உண்மையைக் காலம் இன்று நமக்கு உணர்த்தி விட்டிருக்கிறது.

தமிழர்களது உழைப்பு உலகப பிரசித்தமானது. இந்தப் புதிய ஐரோப்பிய குடியேற்ற நாடுகளுக்குக் கப்பலேறியபோதுதமிழன் எடுத்துச் சென்ற ஒரே மூலதனம் இந்த உழைப்பு ஒன்றுதான். தமிழன் ஏறக்குறைய 35 சிறிய, பெரிய நாடுகளில் குடியேற்றப்பட்டதாக வரலாறு நமக்குக் கூறுகிறது.

தமிழர்கள் குடியேறிய நாடுகளுள் அதிக விழுக்காடு கொண்ட குடியேற்றம் பசிபிக் சமுத்திரத் தீவான நியூ கலிபோனியாவில் நிகழ்ந்தது இன்று இந்த நாட்டில் ஒரு சிலரே தமிழ்ச் சந்ததியினராக வாழ்ந்து வருவதாய் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுபோல் ஏராளமான தமிழர்கள்குடியேறிய பஸிபிக்பெருங்கடல் தீவான தாஹித்தி, மற்றும் கரிபியன் கடல் தீவுகளிலும் இதே நிலைதான் இருந்துவருகிறது. மேலெழுந்த வாரியாகக் குறிப்பிடுவதாயின் அன்று குடியேறிய தமிழர் தொகை 1/4 பங்கினரே இன்று இத்தீவுகளில் காணப்படுகின்றனர், பல தீவுகளில், குடியேறிய தமிழர் பற்றிய தகவல்கள் எதுவும் இன்று கிடைப்பதாயில்லை. அண்மையில்தான் இறீயூனியன் தீவில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ச் சந்ததியினர் பற்றிய புதிய பலதகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

இப்படி உலகத்தமிழினத்தின் எண்ணிக்கையில் பயங்கரமான வீழ்ச்சி காணப்படுவதற்கும் அவர்கள் வாழ்விடங்களின் நிலப்பரப்புக் குறுகிக் கொண்டு வந்துள்ளமைக்கும்காரணிகள்பல;முக்கியமானவற்றை மட்டும் இங்கு கோடிட்டுக் காண்பிக்க விரும்புகிறேன்:

குடியேற்ற நாடுகளில் பிற மொழித் திணிப்பு. பிற கலை கலாச்சாரங்களின் ஆதிக்கம், தமிழ் பண்பாட்டிற்கு முற்றிலும் மாறுபட்ட புதிய சூழ்நிலையும் அதன் தாக்கமும், அன்னிய அரசுகள் இவர்களது சொந்த மொழி, கலை, கலாச்சாரத்தை வளர்த்துக் கொள்ள எவ்வித உதவியும் வழங்காமை. தமிழகத்துடனான இவர்கள் தொடர்பு துண்டிப்பு. இவைகளை முக்கிய காரணிகளாக நாம் காண முடியும்.

கடல் கடந்த நாடுகளில் இன்று வாழும் தமிழர்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகளை ஆய்வு செய்யுமுன் ஓர் அடிப்படை உண்மையை ஈண்டு குறிப்பிடுதல் பொருத்தமானது. இந்தியாவை விட்டுக் கடல் கடந்து சென்ற இந்திய மக்களை வடஇந்தியர், தென் இந்தியர் என இரு பெரும் பிரிவுக்குள் அடக்கலாம். முற்றிலும்மாறுபட்ட மொழி, பண்பாடுகளைக் கொண்ட இந்த இரு பெரும் பிரிவுகளுக்கிடையே பல்லாண்டு காலமாக நடைபெற்றுவரும் ஆதிக்கப் போட்டி அல்லது தன் இனப் பாதுகாப்புக்கான உணர்வுகள் குடியேறியநாடுகளிலும் பிரதிபலித்துவருவதை நாம் காணக்கூடியதாய் இருக்கிறது. ஒரு நாட்டில் ஆட்சி மொழியாக எந்த மொழி இருக்கிறதோ அதற்கே அந்தஸ்தும், அதிகாரமும்உண்டு அந்த மொழியைப் பேசுவோர் முதல்தரப் பிரசைகளாகவும் ஏனைய பிறமொழிகளைப் பேசுவோர் இரண்டாந்தரப் பிரசைகளாகவும் மாறி வருவதை நாம் இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் அவதானித்து வந்துள்ளோம்.

இந்த நிலையை இந்தியாவில் நன்கு பயன்படுத்திப் பயன்கண்ட இந்தி மொழி பேசும் மக்கள், தம் ஆதிக்கப் போக்கினைக் கடல்கடந்தும் செயற்படுத்தி வரும் நிலையை நாம் அவதானிக்க முடிகிறது. உதாரணமாக பீஜி, மொரீசியசு நாடுகளில் வெளிப்படையாகக் காணப்படும் இந்த இரு இன மக்களின் ஐக்கியம் அல்லது இனக்கலப்பு, தமிழ் இனப் பேரழிவின் ஒரு பயங்கர அம்சமாகவே தோன்றுகிறது.

பீஜியில் வெளிவந்த 'சங்கம்' என்றஏடுஅச்சகத்துடன் எரியூட்டப்பட்ட நிகழ்ச்சி, மொரிசியசுசுதந்திரம்பெற்ற காலகட்டத்தில் அந்நாட்டில் ஏற்பட்டிருந்த தமிழ் இன ஒற்றுமை முறியடிக்கப்பட்டமை போன்ற நிகழ்ச்சிகள் இந்தச் சக்திகளின் திட்டமிட்ட சூழ்ச்சிகளின் வெளிப்பாடே என்பது துலாம்பரம். இதுபோல் பிரெஞ்சு ஆதிக்கத்துக்குட்பட்ட மேற்கு இந்தியத்தீவுகளில் காணப்படும் வட இந்திய — தென் இந்திய பகை உணர்வுகளை நாம் கவனத்துக் கெடுத்துக் கொண்டால் தமிழ் இன அழிவு தமிழகத்துள் மட்டுப்படுத்தப்படாது — கடல் கடந்தும் வெகு விரிவாக நடத்தப்பட்டு வருகிறது என்பது கண்கூடு.

தமிழர் புவியியற் பரம்பல் பற்றிப் பொதுவாக நாம் ஆராயப்புகுமுன் எப்படிப்பட்ட பண்புகளைக் கொண்டோரை நாம் தமிழர்களாக மதிப்பீடு செய்யலாம் என்ற வினுவிற்கு விடையாக வண. தனிநாயக அடிகளார் தமது ஆய்வுக் கட்டுரையில் பின்வருமாறு விளக்கம் தருகிருர்:—

(1) இன அடிப்படையினர்.

(2) தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டோர்.

(3) தமிழ்ப் பண்பாட்டைப் பேணுபவர்கள்.

(4) தமிழோடு தொன்மைத் தொடர்பு கொண்டவர்கள்.

இப் பண்புகளில் ஒன்ருே அல்லது அதற்கு மேற்பட்டனவற்றைக் கொண்டவர்களைத் தமிழர் என்ற அடிப்படையில் மதிப்பீட்டுக்குட்படுத்தலாம் என்கிருர் நம் தமிழ் முனிவர்.

இன்று தமிழர்கள் ஓரளவு தம் மொழி, கலை, கலாச்சாரங்களைப் பேணிக் காப்பாற்றிக் கொண்டு தமிழர்களாக வாழும் நாடுகள் தமிழகம், தமிழ் ஈழம், ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளே. இதற்கு அடுத்த படியாக பர்மா, சுமத்ரா, தென்ஞபிரிக்கா, சிசெல்ஸ், மொரீசியசு, இறீயூனியன் தீவுகளை நாம் சேர்த்துக் கொள்ள முடியும்.

கரிபியன் கடல் பிரதேசத்திலுள்ள ரினிடாட், மாட்னிக், குவாட்லூப் ஆகிய தீவுகளில் வாழும் தமிழர்கள் நிலைபற்றி ஓரளவு தகவல்களே பெறப்பட்டுள்ளன. தமிழர் நிலை பற்றி எதுவுமே தெரியாத நாடுகளாகக் கீழ் வருவனவற்றைக் குறிப்பிடலாம்:— நியூகலிடோனியா, தாஹித்தி, அன்ரீல்ஸ். கென்யா, உகண்டா, சென்ட்வின்சன்ட்,கிறினிடா சென்ட். கிற்ஸ்: நேவிஸ். சென்ட் குரொக்ஸ், பிரெஞ்சு கினியா, டேமாரு, ஜெமெய்க்கா.

ஆகவேகுடியேறியநாடுகளில் இன்று எஞ்சியுள்ள தமிழ்ச் சந்ததியினரையாவது நாம் காப்பாற்றியாக வேண்டும்; இத்துறையில் தாய்த்தமிழகம் செய்திட்டபங்கு என்ன? என்பதை நாம் சிந்திக்கக்

—5-ம் பக்கம் பார்க்க

## உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க முதல் மாநாடு இன்று சென்னையில ஆரமபம

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க முதலாவது மகாநாடு சென்னையில் இன்று ஆரம்பமாகின்றது.

சென்னையை அடுத்துள்ள வி. ஜி. பி. தங்கக் கடற்கரையில் பிரதிநிதிகள் மகாநாடு 16ம்17ம்திகதிகளிலும்பொது மகாநாடு 18ம் திகதி சென்னை கற்பகாம்பாள் திருமண மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

இம் மகாநாட்டில் மலாய் மொழிப் பேரறிஞர் திரு. ஜி. சூசை அவர்களால் மலாய் மொழியில் பெயர்க்கப்பட்ட திருக்குறள் மலாய் மொழிக் கவிதை நூல் வெளியிடப்படவுள்ளது.

அச்சமயம் மலாய் தமிழ் முனிவர் திரு. இராமதாசர் அவர்கள் அன்னருக்கு பொன்னுடை போர்த்தி அன்னரை கௌரவிக்கவுள்ளார்.

இம்மகாநாட்டில் தமிழ் நூல் கண்காட்சி, கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் தமிழர் வாழும் இடங்களில் உள்ள பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்களும் இடம் பெற உள்ளன.

இம்மகாநாட்டில் இங்கிலாந்து, இந்தோனேசியா பிரான்சு, இறியூனியன், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை மொரீசியஸ், பீஜி, அந்தமான், அமெரிக்கா, போன்ற பல நாடுகளையும் சேர்ந்த இவ்வியக்கத்தின் உறுப்பினர்கள் பிரதிநிதிகளாக பங்குபற்றுகின்றனர்.

இலங்கையிலிருந்து பங்குபற்றுவோர் விபரம் வருமாறு திரு. இரா. கனகரெத்தினம், திருமதி பி. கனகரெத்தினம், கவிஞர் செ. பரமநாதன், திருவாளர்கள் ஆ. சண்முகலிங்கம், நா. பத்மநாதன், ஆர். வி. சுந்தரம், எஸ். கந்தசாமி, எஸ். குணபாலன், வி. இளங்கோ, எஸ். ஜெயசேகரன், இராசமனோகரன், எஸ். ஜோதிலிங்கம், இ. சற்குருநாதன், கே. சிவக்கொழுந்து, புதுவை இரத்[illegible] பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே. ஆருக்கு நன்றி கூறுவோம்!

**அன்பு நண்பா,**

"தமிழர்களே, ஜே. ஆர். ஜெயவர்த்தனவை, நம்புங்கள்; அவர் என்னமாதிரி தேனும் பாலும் சொட்டச் சொட்டப் பேசுகிறார்; எவ்வளவு அழுத்தமாக கருத்துக்களை அள்ளி வீசுகிறார்; முந்திய அரசின் கெடுபிடிகளை எப்படியெல்லாம் பிய்த்துக்காட்டுகிறார்; எவ்வளவு பெரிய ஜனநாயக உள்ளத்தை அடிக்கடி நம்முன் திறந்துகாட்டுகிறார்; இனவாதம் தமிழ்த் துவேஷம், எதுவுமே தம்மிடம் துளியும் இல்லையென்கிறாரே இந்த மனிதர்; போதாக்குறைக்கு தரப்படுத்தலையே அகற்றிவிட்டதாக அடிக்கடி கூறிக்கொள்ளும் பெருமான் அன்றோ! அவர் முற்றும் துறந்த முனிபுங்கவர்போல ஆகிவிட்ட ஜே. ஆரை தமிழர்கள் நம்பாமல் வேறுயாரை நம்புவது?; அவரை விட்டாலே வேறு கெதியே இல்லை; ஜே. ஆர்மீது நம்பிக்கை வைத்து தமிழர் பொறுமையுடன் இருக்க வேண்டும்; தமிழர் விடுதலைக்கூட்டணியினர் 'பொடியளின்' இழுப்புக்கெல்லாம் ஆடாது ஜே. ஆரின் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும்; அப்போதுதான் இந்த நாட்டில் தமிழர்கள் உரிமையுடன் வாழமுடியும்; கௌரவமாக வாழ முடியும்; எனவே ஜே. ஆரை நம்புங்கள்; அந்த மனிதர் இப்போது என்னமாதிரி மாறிவிட்டார்; ஐக்கிய தேசியக்கட்சியே இப்போது மாறிவிட்டது!"

நண்பா, என்னை இவனுக்கும் ஜே. ஆர்: பித்தம் திடீரெனத் தலைகேறி அதனால் அரற்றுகிறானே என்று எண்ணிவிடாதே; ஐக்கிய தேசியக்கட்சியிலும் ஜே. ஆரிலும் மயங்கித் தியங்கி நிற்கின்ற ஒரு சில மேல்மட்டத் தமிழர்களும் இந்த நாட்டில் வெளிவரும் ஆளுங்கட்சியின் ஊதுகுழல்களான நாளேடுகளும் தமிழ் மக்களுக்கு செய்துவருகின்ற போதனையிய "ஜே. ஆரை நம்புங்கள்" என்ற மேற்படி பிரசாரம் ஆகும்!

தமிழர்களில் சிலர் தாங்கள் இப்போது அனுபவித்துவரும் சொகுசு வாழ்க்கை சீர்கெடாமல், குழம்பிடாமல் பார்த்துக்கொள்வதற்கும் சமுதாயத்தில் மேனா மினுக்கிகளாக தாங்கள் தொடர்ந்து உலாவருவதற்கும், தங்கள் தொழில்களை வளர்த்துப் பேணிப்பாதுகாத்துக்கொள்வதற்கும், பளபளக்கும் கார்களில் பவனிவருவதற்கும்—தமிழ் சமுதாயம் முழுவதும் ஜே. ஆர், என்ற தனி மனிதரின் நல்லெண்ணத்தை நம்பியே உயிர் வாழ வேண்டுமென்ற பிரசாரத்தினை முடுக்கிவிட்டு, தமிழ்தேசிய இனத்தின் விடுதலைச் சிந்தனையையும், தன்னம்பிக்கையையும் போராட்ட உணர்வையும் திட்டமிட்டு கெடுத்துவிட முயன்றுவருகின்றனர்!

நாளேடுகள் பாவம்—என்னதான் பத்திரிகை சுதந்திரம் பற்றிப் பேசப்பட்டாலும்—எந்தக் கட்சி ஆட்சிபீடத்திலமர்கின்றதோ, அந்தக் கட்சிக்கு சார்பாக நிறத்தை மாற்றியே எழுதிடவேண்டிய நிலைக்குட்பட்டவை அவை. இரண்டு தமிழ் நாளேடுகளைத் தவிர ஏனையவை சிங்கள முதலாளிகளாலும், அரசாங்கத்தினாலும் நடத்தப்படுபவை; அவை ஜே ஆர். புகழ்பாடிடத்தானே செய்யும்? அது தானே அவற்றின் ஏகபோகக் கடமை!

ஆனால் ஜே. ஆர், அவர்கள் எவ்வளவுதான் இனிக்கப் பேசினாலும்—எவ்வளவுதான் பரந்த மனப்பான்மை காட்டினாலும்—அவரது கடந்தகால அரசியல் சிந்தனைகளையும் நடவடிக்கைகளையும் திட்டவட்டமாக அறிந்திருந்தோருக்கு அவர்மீது ஐயப்பாடும் நம்பிக்கையீனமும் இருந்துகொண்டேதானிருந்தது! சில சமயங்களில் ஜே. ஆரின் பேச்சுக்களைக் கேட்டபோது, இந்த மனிதர் உண்மையிலே மாறித்தான் விட்டாரோ என்ற ஐயம் எனக்கே பல தடவைகள் ஏற்பட்டபோதிலும், அவரது முந்திய ஒவ்வொரு நடவடிக்கையும் நமக்கு மனப்பாடமாக இருக்கின்ற காரணத்தினால் எவ்வித 'மயக்கமும்' நம்மை நெருங்க முடியாமலிருந்தது!

1944ம் ஆண்டே, சட்டசபையில் சிங்களம் மட்டுமே நாட்டின் ஏக ஆட்சி மொழியாகவும், சிங்களமே பிள்ளைகளின் போதனா மொழியாகவும், சிங்களமே அரசாங்க சேவைப் பரீட்சைகளுக்குரிய மொழியாகவும் இருக்கவேண்டுமென்ற பிரேரணையை கொண்டுவந்தவர் இதே ஜே; ஆர். அவர்கள் தாம்!

இன்றைக்கு, தமிழ் ஈழத்தின் பூர்வ குடித் தமிழர்களையும் மலையகத் தமிழர்களையும் இணையவிடாமல் பிரிப்பதற்காக—மலையகத் தமிழர்களின் நிலையை எண்ணி முதலைக்கண்ணீர் வடித்தாலும்— குடியுரிமை வாக்குரிமையோடு 1947ம் ஆண்டு ஏனைய பிரஜைகளைப் போல வாழ்ந்து இருந்த மலையகத் தமிழர்களை குடியுரிமை வாக்குரிமை யற்றவர்களாக்கும் சட்டங்களைக் கொண்டுவந்து, அவர்களுடைய பிரதிநிதித்துவத்தைப்பறித்து, அவர்களை அரசியல் அநாதைகளாக்கிய கொடுமையை செய்தவர் ஜே. ஆரும், அவர் சார்ந்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூலவரான டி. எஸ். அவர்களுமே என்பதை யாரும் மறந்துவிட முடியாது!

வடக்கு கிழக்கு மாகாணங்களை தமிழ் பேசும்மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாக ஏற்று, அங்கீகரித்து, அங்கு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்தவும், பிரதேசசபைகளை நிறுவி அதன்மூலம் பிரதேச சுயாட்சி வழங்கவும், தமிழை தேசிய சிறுபான்மை மொழியாக அங்கீகரித்து வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக்கவும் முதன் முதலாக வழிவகை செய்த பண்டா—செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டியாத்திரை மேற்கொண்டு அந்த ஒப்பந்தத்தை கிழித்தெறியச்செய்து தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்கவிருந்த தாயகப் பாதுகாப்பை கொட்டிக் குலைத்தவர் இதே ஜே. ஆர். என்பதை எந்தத் தமிழன்தான் மறக்க முடியும்?

இதேமனிதர்—பண்டா செல்வா ஒப்பந்தம் மீண்டும் அமுலுக்கு வந்தாலும், அதை எதிர்ப்பதில் முன்னுக்கு நிற்பேன் என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தானே 1974ல் யாழ்ப்பாணத்தில் கூறியிருந்தார்!

இத்தகைய ஜே. ஆரிடம் தமிழினத்தின் உரிமைகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஒரு வேளை அடிப்படையான மனமாற்றம் உண்மையில் ஏற்பட்டிருக்குமோ என்ற ஐயம் எனக்கும் கூட ஏற்பட்டது—சோசலிச நாடுகளில் தேசிய இனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சுயநிர்ணய உரிமையை இங்கும் தமிழ் மக்களுக்கு தாம் வழங்கவிருப்பதாக தேசிய அரசுப் பேரவையில் அவர் அண்மையில் அறிவித்திருந்ததைப் படித்திட்டபோது!

## அரசியல் மேடை

ஆனால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை தாமும் வழங்கப் போவதாக அவர் கூறி வாய் மூடுவதற்கு முன்னரே — தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் அவர்களினது சுதந்திர ஜனநாயக அபிலாஷைகளையும் கிள்ளியெறியும் அடக்குமுறை சட்டங்களை அரசு தயாரித்து வருவதாக செய்திகள் வந்து விட்டன; பிரிவினை கோரிக்கையை தடைசெய்யும் அடக்குமுறை சட்டங்கள் உருவாகி வருகிறதாம்!

இந்த செய்தி ஒருபுறமிருந்திட. தேசிய அரசுப்பேரவையில் 6.12.77ல் பிரதமர் ஜே. ஆர். நிகழ்த்திய உரை, இனப்பிரச்சினை தொடர்பாக அவரிடம் எந்த மனமாற்றமும் கிடையாதென்பதையும் அதே பழைய ஜே. ஆரே. (Same old J.R) இப்பொழுதும் அதிகாரபீடத்திலிருப்பதையும் புட்டுக் காட்டி விட்டது!

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதானால் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்று, அததேசிய இனத்தின் பாரம்பரிய தாயகத்தில், அந்த இனம் தன்னைத்தானே ஆள அனுமதிக்க வேண்டும். ஆனால் பிரதமர் பேரவையில் தெரிவித்த கருத்து சுயநிர்ணய தத்துவத்தை மட்டுமல்ல—தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளையே தூக்கியெறிந்து விட்டது!

ஜே. ஆர், யார் என்பதை தோலுரித்து காட்டியுள்ள அவரது உரை சொல்லுக்குச் சொல்வருமாறு:

In regard to colonization, the late Mr. D.S. Senanayake's land laws say that land should be given to people of the area first. We are implementing that.

I knew you have a fear that there would be colonization by non-Tamils in so-called traditional Tamil areas. I do not accept your interpretation of "traditional Tamil areas."

But here, in the remarks you made, you wanted all these evacuees deposited in the Northern area. They are not all from that area. They do not come under the jurisdiction of Mr. D. S. Senanayake's land law. They are outside it. If they are of Tamil blood or race you do not mind them coming and colonizing, though they are not from the area. I do not agree with that.

We cannot divide Sri Lanka geographicaliy into Tamil area, Sinhalese area, Muslim area, Burgher area and English area. Sri Lanka is one. But every citizen in Sri Lanka should have equal opportunity, equal place and equal rights wherever he is, what ever his colour, blood or language. On that I am absolutely inflexible in my purpose to achieve it and I do not want abvice from anybody. I know what is just and I intend to do it. We are trying to create as far as the minorities are concerned — if I may use, the word 'minority', the Sinhalese are in a majority — a just society.

Hansard (N.S.A.) Col. 336 6-12-77

"குடியேற்ற திட்டத்தில் டி. எஸ். சேனநாயகாவின் காணிக்கொள்கையையே நாம் பின்பற்றுவோம்! அந்தந்தப் பகுதியிலுள்ள குடியேற்றத் திட்டங்களில் அந்தந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கே காணி வழங்கப்பட வேண்டுமென்பதே டி.எஸ்.; கொள்கையாகும்"

'மரபுவழித்தமிழர் தாயகம் என்று கூறப்படும் பிரதேசத்தில் தமிழர் அல்லாதவர்கள் குடியேற்றம் நடைபெற்றுவிடும் என்று நீங்கள் அஞ்சுவது எனக்குத்தெரியும். ஆனால் "மரபுவழித்தமிழர் பிரதேசம்" என்பதற்கு நீங்கள் [கூட்டணியினர்]கொடுக்கும் வியாக்கியனத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது'.

வடபகுதியைச் சேராத தமிழ் அகதிகளை வடபகுதியில் குடியேற்றும்படி கோருகிறீர்கள் அவர்கள் வெளியிடங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் ஒரே இனத்தை ஒரே இரத்தத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் அங்கு வந்து குடியேறுவதை நீங்கள் வரவேற்கிறீர்கள் ஆனால் நான் இதை ஏற்கத் தயாராக இல்லை!

"இலங்கையை பூகோள ரீதியாக தமிழ்ப்பகுதி, சிங்களப்பகுதி, முஸ்லிம்பகுதி பறங்கியர் பகுதி என்று நாங்கள் பிரிக்கமுடியாது. சிறிலங்கா ஒன்றுதான். இதில் எல்லோருக்கும் சம உரிமையுண்டு இக்கொள்கையில் நான்யாருக்கும் வளைந்துகொடுக்க மாட்டேன்!"

நண்பா இப்போது ஜே. ஆர். யாரென்பது திட்டவட்டமாக தெரிந்து விட்டது அல்லவா?

டி. எஸ். சேனநாயகாவின் காணிக்குடியேற்றக் கொள்கையின் பெறுபேறாகத்தான்—தமிழ் நாடாக இருந்த கல்லோயாவும். அல்லையும், கந்தளாயும் சிங்கள நாடாக மாற்றப்பட்டது. அதே குடியேற்றக் கொள்கையே ஜே. ஆர். ஆட்சியிலும் தொடரப் போகிறது.

தமிழினத்தை இரண்டாந்தர நிலைக்குத் தாழ்த்திய சிங்களம் மட்டும் சட்டத்தில் ஓர் அட்சரமும் மாற்றப்படமாட்டாது! அதையும் ஜே. ஆர். தெளிவாகக் கூறிவிட்டார்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாட்டின்படி வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் மரபுவழித் தாயகம் என்பதை தாம் ஏற்கப் போவதில்லையென்றும் ஜே. ஆர். அறிவித்து விட்டார்! —அதாவது காலஞ்சென்ற பண்டாரநாயகா காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், டட்லி காலத்தில் ஐ. தே. கட்சியும் ஏற்றுக் கொண்ட இந்த அடிப்படை உண்மையை—அதாவது வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற அப்பட்டமான, சரித்திர ரீதியான அரசியல் ரீதியான உண்மையைக்கூட தாம் ஏற்க முடியாது என்று ஒரேயடியாக ஜே. ஆர். அறிவித்துவிட்டார்; இந்த அடிப்படையைக்கூட ஏற்காத ஜே. ஆரிடம் தமிழர்கள் இனியும் எதை எதிர்பார்த்திட முடியும்?

தமிழர்கள் மீண்டும் ஒரு முறை ஜே. ஆரை நம்பிக் கெடுதற்கு முன் தமது சுய உருவதைத் உள்ளத்தை திறந்து புட்டுக் காட்டிவிட்ட ஜே. ஆருக்கு நன்றி கூறுவோம்!

அன்புள்ள தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சன்சோனி' ஆணைக்குழு; 2-1-78க்கு முன்னர் முறைப்பாடுகளை அனுப்புங்கள்!

1977 ஆகஸ்ட் இனக்கலவரத்தைப் பற்றி விசாரணை செய்வதற்கென அரசால் நியமிக்கப்பட்டுள்ள சன்சோனி ஆணைக்குழு, நாடெங்கிலுமிருந்து பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து எழுத்துமூலமான முறைப்பாடுகளை இப்போது கோரியுள்ளது. இந்த முறைப்பாடுகளின் மூன்று பிரதிகள், 2-1-78க்குமுன்னர் 'செயலாளர் விசாரணை ஆணைக்குழு, 111/1 சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை, கொழும்பு. 2 எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம்அனுப்பி வைக்கப்படவேண்டும்.

ஆணைக்குழு முன் நேரடியாக வாக்குமூலம் அளிக்கவிரும்புவோர், அதுபற்றியும் 2-1-78க்கு முன்னர் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும் — சாட்சியமளிக்கவிரும்புபவர்கள் தாம் சாட்சியமளிக்க விரும்பும் தமக்குக் கிட்டிய கச்சேரி அமைந்துள்ள பட்டினம் எது என்பதையும் குறிப்பிடவேண்டும்.

இனவெறிக் கொடுமையால் பாதிப்புக்குள்ளானவர்களும் வன்முறைகளை நேரடியாக கண்டவர்களும் உடனடியாகத் தாமதியாது சன்சோனி ஆணைக்குழுவுக்கு எழுதும் படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆர்

# திருகோணமலை துறைமுகத்தை பிரிவினைக்கு பயன்படுத்த கருணாநிதி திட்டமாம்.

## துட்டகைமுனு இயக்கத்தின் துவேஷப் பிரச்சாரம்!

தமிழ்நாடு பிரிபட வேண்டுமானால் முதலில் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஓர் தமிழ் இராச்சியம் தோன்ற வேண்டும் என்று" கலைஞர் கருணாநிதி கூறியதாக அகில இலங்கை துட்டகைமுனு அபிவிருத்தி இயக்கம் என்ற பெயர் கொண்ட சிங்களவர் இயக்கம் இன்று பிரசாரம் செய்து வருகின்றது. அனுராதபுரம் பகுதியில்இப்பிரசாரம்நடைபெற்றுவருகிறது. திருகோணமலைத் துறைமுகம் சிறந்த கடற்படைத்தளமென்றும், தென் இந்தியத் தமிழ்த் தலைவர் கருணாநிதி இதை தமது பிரிவினைக்கு பயன் படுத்த உத்தேசித்துள்ளார் என்றும், ஆகையால் தென் இந்தியாவிலிருக்கும் திராவிடர்கள் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஓர் தமிழ் அரசு நிறுவப்படுவதற்கு முயற்சிகள் செய்துவருவதாகவும் மேலும் தமது பிரசாரத்தில் இந்த இயக்கம் கூறிவருகின்றது.

இலங்கையின் வடக்குகிழக்கில் மாகாணங்களிலிருந்து தென் இந்தியா திராவிட இராச்சியத்தை — விஸ்தீரணப் படுத்த தமிழர்கள்திட்டமிட்டுள்ளதாக இவ்வியக்கம் கருதுகின்றது.

ஆகவே, அஞ்சாமல் சிங்கள மக்கள் பெருமளவு திருகோணமலையில் குடியேற வேண்டுமென அரசிடமும் சிங்கள மக்கள் மத்தியிலும் இந்த இயக்கம் வற்புறுத்தி வருகின்றது.

## பழைய புதை...

—3-ம் பக்கத் தொடர்

கடமைப்பட்டுள்ளோம். மொழியியல், தமிழியல், புவியியல், அரசியல், அறிவியல் சமூகவியல் துறை ஆய்வாளர்களை ஏராளமாகக் கொண்ட தமிழகத்தில் ஒரு சிலரேனும் இத்துறையில் ஈடுபட்டிருக்கிறார்களா?

அகநானூறு, புறநானூறு தொல்காப்பியம், இதிகாசம் இவற்றோடு புதையுண்ட ஹரப்பா, மொகஞ்சதாரோ நாகரிகப் புதைபொருளாராய்ச்சியுடன்காலத்தையும் விரயமாக்கி வருகிறார்கள். பழைய புதைபொருள்களை அகழ்வாராய்வு செய்யும் அதே சமயத்தில் புதியபுதைகுழிகள் பல உருவாகின்றன என்பதைச் சுட்டிக் காட்டி விழிப்பை ஏற்படுத்த வேண்டுவது எனது கடமையாகிறது; எனவே தமிழக அறிஞர்களே; முதலில் அனைத்து உலகிலும் நடந்துவரும் தமிழின அழிவைச் சிறிது சிந்தியுங்கள்: அந்த அழிவு நிலையைத் தடுக்க உதவுங்கள்; உங்கள் பார்வை கரிபியன் கடல்வரைசெல்லட்டும் என இறைஞ்சுகிறேன்.

தமிழகப் பத்திரிகைத் துறைப் பெருமக்களே; இலங்கைக் கடிதம், மலேசிய செய்தி மடல், சினிமாச் செய்திச் சுருள், பிரயாணக் கட்டுரைகள் எனக் கடல் கடந்த தமிழர்வாழும் நாடுகளுக்கு அனுப்பப்படும் பிரதிகளில் மட்டும், உங்கள் வெளியீடுகளுக்குள் நான்கு பக்கத் தாள்களைக் திரிப்பதன் மூலம் வெளிநாட்டுத் தமிழர்களை ஏமாற்றிப் பணம்பண்ணுவதாக உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். இதனால் உங்கள் வியாபார நோக்கம் ஈடேறுமேயல்லாது உலகத் தமிழர் ஐக்கியம் ஏற்படப் போவதில்லை.

"இல்லாமைக்கு எதிரான போராட்டம்" (சர்வதேச) சஞ்சிகை இலங்கையில் நிகழ்ந்த பட்டினிச் சாவு நிகழ்ச்சிகளை அம்பலப் படுத்தியதால் அது உலகின் மனச்சாட்சியை உறுத்திற்று. இந்திய வம்சாவழியினரான தமிழ்த் தோட்டத் தொழிலாளருக்கு ஓரளவு நிவாரணத்தையும் அச் செய்தி பெற்றுத தந்தது! அந்நேரம் தமிழக இலக்கிய சஞ்சிகைகளோ வாழாவிருந்தன.

1977 ஆகஸ்ட் வன்செயல் நிகழ்ச்சிகள் மேலைநாடுகளில் தொலைக்காட்சிகளில் கூட காண்பிக்கப்பட்டன! தமிழகத்திலிருந்து வெளிவரும் இலக்கிய சஞ்சிகைகளோ அச்சம்பவங்களைக் கூட இருட்டடிப்புச் செய்திருந்தன. உங்களிடையே புதிய பார்வை—புதிய கண்ணோட்டம், புதிய சிந்தனைகள் மலரவேண்டும் என உலகத் தமிழர்கள் சிறப்பாக உலகத் தமிழ் வாசகர்கள் எதிர்பார்க்கிறார்கள். உங்கள் போக்குக்கு வர்த்தக நோக்கம்தான் காரணமாயின், உலகத் தமிழ் வாசகர்களைத் திருப்திப்படுத்த முடியாத கட்டம் வருமேல் உங்கள் வர்த்தகத்துக்கே அரோகராத்தான். வாசக வட்டாரத்தினரின் தேவைகளை வளர்த்து அதற்குத் தீனி போட்டு உங்கள் வர்த்தகத்தையும் ஏன் ஆதாயத்தையும் பன்மடங்காகப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இழந்துபோன, அல்லது துண்டிக்கப்பட்ட உலகத் தமிழின ஒற்றுமை மீண்டும் புதுப்பிக்கப்படல்வேண்டும். உலகத் தமிழர்கள் வாழ்விலும், நிலையிலும் புதியமறுமலர்ச்சி தோற்றுவிக்கப்பட வேண்டும். தமிழினம் இன்று தப்பிப்பிழைத்து வாழும் நாடுகளில் அவர்கள் தம் மொழிகலை, கலாச்சாரம் போன்றவற்றை வளர்த்துக் கொள்ள நாம் கைகொடுக்க வேண்டும். இதனை நோக்கமாக — இலட்சியமாகக் கொண்டே உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது, தமிழர்தாம் வாழும் நாடுகளுக்கு உண்மையாகவும், விசுவாசமாகவும் வாழ்ந்து கொண்டே உலகெங்கும் பரவியுள்ள தன் இனத்தை, மொழியை, பண்பாட்டைக் காப்பாற்ற முன்வரவேண்டும். இதுவே எமது இயக்கத்தின் இதயதாகம்! இலட்சிய வேட்கை!

1977 ஆகஸ்ட் திங்களில் ஸ்ரீலங்காவில் நிகழ்ந்த வன்செயல்களால் மிகமோசமான பாதிப்புக்கு ஆளாகியவர்கள் இலங்கையின் பூர்வகுடித் தமிழர் மட்டுமல்ல. இந்திய வம்சாவழித் தமிழர் மட்டுமன்றி கேரள, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த இந்தியவம்சாவழியினரும் பாதிக்கப்பட்டனர். கேரள சமாஜத்தின் தலைவர் பகுத்தறிவுச் சிங்கம் டாக்டர். கோவூர் வெளியிட்ட அறிக்கையே இதனை உறுதிப்படுத்துகிறது. கேரள. ஆந்திர மாநில மக்கள் இனவுணர்வு மிகுந்தவர்கள் என்பது பிரசித்தம், ஆயினும், இலங்கையில் கேரள,ஆந்திர மாநிலத்தைச்சேர்ந்தவர்கள் தாக்குதலுக்கு உள்ளானநேரத்தில் சம்பந்தப்பட்ட மாநிலங்களில் அது எவ்வித எதிரொலியையும் கிளப்பவில்லை.

அதற்கு நேர்மாறாக இலங்கையில் தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னல் கேட்டு கலைஞர் தலைமையில் 5 லட்சம் தமிழர் சென்னையில் ஆர்ப்பாட்டம் செய்ததும், தமிழக, பாண்டிச்சேரி சட்டசபைகளும், மேற் சபைகளும் மத்தியஅரசைச் செயற்படுமாறு வற்புறுத்தி நிறைவேற்றிய தீர்மானங்களும், லண்டன், நியூயோர்க். பாரிஸ், நோர்வே போன்ற நாடுகளில் உள்ள தமிழர் எடுத்த நடவடிக்கைகளும் மலர்ந்துவரும் உலகத் தமிழினத்தின் ஒற்றுமைக்கும், இன உணர்வுக்கும் நல்லதோர் எடுத்துக்காட்டு.

1976ம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டுக்கு வருகை தந்த லிபியத் தலைவர் கேணல் கடாபி இலங்கை வாழ் முஸ்லீம் மக்களுக்கு விடுத்த செய்தியை உங்கள் முன் வைக்கிறேன். கடல்கடந்த நாடுகளில் இன்னல்படும் தமிழர் சார்பில் கருத்து வெளியிடத்தானும் பின்வாங்கும் தமிழ்த் தலைவர்களுக்கு கேணல் கடாபியின் மேற்படி கருத்துக்கள் சமர்ப்பணம்!

'என்னுடைய சகோதர முஸ்லீம் மக்களைச் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் நாம் இருந்தாலும் இதயத்தால் ஒன்றுபட்டிருக்கிறோம். பல காலம் பழகிய ஒரு குடும்பத்தின் சகோதரர் போன்று நாம் இருக்கிறோம், உண்மையின் விசுவாசிகளாகிய நாம் சகோதரர்களே!

"லிபிய அரபுக் குடியரசு உலக முஸ்லிம்களை ஆதரிக்க என்றும் முன்னிற்கும். உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்களின் விமோசனத்துக்கு நாம் உதவுவோம்;இஸ்லாமென்ற ஒரே கொடியின் கீழ் நாம் ஒன்றுபட்டிருப்பதால் முஸ்லிம்கள் எங்கிருந்தாலும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவக் கடமைப்பட்டவர்கள்"—வீரகேசரி20-8-76

வாழ்க உலகத்தமிழர்கள்! ஓங்குக உலகத்தமிழர் ஒருமைப்பாடு!!

# கம்பளி வழங்குவதிலும் வம்பு!

ஆகஸ்ட் இனக்கலவரத்தினால பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கு வழங்குவதற்கென வெளிநாடுகள் இலவசமாக அனுப்பிவைத்த பொருட்களில் நல்லரகமான கம்பளிகளை தமிழ் அகதிகளுக்கு வழங்குவது அவர்களது 'தகுதி'க்கு அதிகமாகிவிடுமென்றும், கம்பளிக்குப் பதிலாக (கம்பிளிகளை விற்றுவிட்டு அந்தப்பணத்தில்) சாதாரண பருத்தி துணிகளை வாங்கி வழங்குமாறும் யாழ் அரசாங்க செயலகத்திலிருந்து கட்டளைபிறப்பிக்கப்பட்டுள்ளதாம்,

இதேபோல வெளிநாடுகள் வழங்கியிருக்கும் 'சேட்' துணிகளை அகதிகளுக்கு வழங்கத் தேவையில்லை என்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாம்!





பாவியுங்கள்.

றேயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

றேயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றேயல் பேக்கிங்பவுடர்
றேயல் கஸ்டட் பவுடர்
றேயல் கோண் பிளவர்
றேயல் பிஸ் மக்ஸ்
றேயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இன்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசுப் பேரவையில் சுதந்திரன்

திரு. டபிள்யு. பி. பி. திசாநாயக்க (யூ.என்.பி. கம்பளை)- "சிங்கள மக்களின் இரத்தத்தைக் குடித்தால்தான் அகதிகள் முகாம்களில் இருக்கும் தமிழர்கள் திருப்தியடைவார்கள் என்று 'சுதந்திரன்' என்ற தமிழ்ப்பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இது போன்ற பாரதூரமான தூண்டிவிடக்கூடிய கட்டுரைகள் சுதந்திரனில் வெளிவருகின்றன. இவை சிங்களத்தில் வெளியிடப்பட்டால், இந்நாட்டில் இரத்தக்களரிகள் ஏற்படும்!"

இரா. சம்பந்தர். "கம்பளை உறுப்பினரின் பேச்சை இடைமறித்து இச்சபையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஒன்றைக்கூற விரும்புகிறேன். சிங்களவர்களின் இரத்தத்தை குடித்தால் மட்டுமே அண்மைய இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் உள்ளம் அமைதியடையுமென்ற கருத்துப்பட, சுதந்திரன் பத்திரிகை செய்தி ஏதாவது வெளியிட்டிருந்தால்—அப்படியான செய்தியை எந்த ஒரு பத்திரிகையும் வெளியிட்டிராது — அப்படிப்பட்ட செய்திக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தொடர்பு ஏதும் கிடையாது என்பதை அறியத்தருகிறேன்.

"எப்படியிருந்த போதிலும், அந்தப்பத்திரிகையில் அத்தகைய அறிக்கை இருந்ததாக கௌரவ உறுப்பினர் கூறுவாராயின், இச்சபையில் அந்தப் பத்திரிகையை சமர்ப்பித்து தமது கூற்றை உறுதிப்படுத்த வேண்டும். அப்படிச் செய்ய அவரால் முடியாவிடின், இப்படியான பாரதூரமான குற்றச்சாட்டை இங்கு சுமத்துவது நியாயமானதல்ல—இது மிகவும் மோசமான குற்றச்சாட்டாகும். இங்கு சொல்லப்படும் கருத்துக்கள் பத்திரிகை மூலமாக நாடெங்கும்பரவி இந்த நாட்டு மக்களின் மனதில் தப்பெண்ணத்தை உண்டாக்கக் கூடியவை!

"குறித்த (சுதந்திரன்) பத்திரிகையை இங்கு சமர்ப்பித்து தமது கூற்றை உண்மையென கனம் உறுப்பினரால் நிரூபிக்க முடியாவிடின், கூட்டணி சார்பாகவும், இந்த நாட்டுத் தமிழ்மக்கள் சார்பாகவும் தமது கூற்றை அவர் வாபஸ்பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. திசாநாயக்கா: நானே இன்னும் பேசிக்கொண்டிருக்கிறேன்.

சம்பந்தன்: எங்களைப் பொறுத்தவரை, நிலைமையை தெளிவாக்கவே விரும்புகிறேன்.

திரு: திசாநாயக்க: நான் சுதந்திரனின் ஒழுங்கான வாசகன் அல்ல (குறுக்கீடு—) நான் அந்தப் பத்திரிகையை கண்டுபிடித்து இரண்டொரு நாட்களில் இச்சபையில் சமர்ப்பிக்க என்னால் முடிந்த அளவு முயற்சிக்கிறேன்.

"இங்கு என்னிடம் இன்னோர் சுதந்திரன் பத்திரிகை உண்டு. அது 6-12-72ல் வெளியிடப்பட்ட பத்திரிகையாகும். இந்த சுதந்திரனின் முன்பக்கத்தில் இடதுபக்க மேல் மூலையில் ஒருபடம் இருக்கிறது. அந்தப் படம் பொத்துவில் இரண்டாவது உறுப்பினரின் படமாகும். அப்படம், பக்கவாட்டில், பொத்துவில் உறுப்பினர் நித்திரை செய்வதுபோல அமைந்துள்ளது. இந்தப்படத்தின் மூலம் அவர் இறந்துவிட்டார். என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது! இந்தப்படம் அவர் பிரேதப் பெட்டியில் இருப்பதுபோலக் காட்டுகிறது.

அவர் இறந்துபோகவும் இல்லை — இறந்து கொண்டு இருக்கவும் இல்லை; அவர் உயிருடன் இருக்கிறார். இச்சபையில் உறுப்பினராகவும் இருக்கிறார்.

தலைவர்: சுதந்திரன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதிகார பூர்வமான ஏடா?

வி. தர்மலிங்கம்; பா.உ. இல்லை!

இரா. சம்பந்தன்: சுதந்திரனில் அப்படியான (சிங்களவர் இரத்தம் குடிப்பது போன்ற) செய்திகள் இடம் பெற்றதாக நான் நினைக்கவில்லை. உண்மையில் அப்படியான செய்திகள் சுதந்திரனில் இருந்திருக்குமானால் அவற்றுக்கும் கூட்டணிக்கும் தொடர்பு இல்லை!

வி. தர்மலிங்கம்: கட்சிவிட்டுக் கட்சிபாய்பவர்களை கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளுவதற்கு நாம் சட்டம் கொண்டுவருகிறோம்-

திரு. திசாநாயக்க: எப்படியிருந்தாலும், எனது குற்றச் சாட்டு சுதந்திரன் மீதேயன்றி, தமிழர் விடுதலைக் கூட்டணி மீது அல்ல!

வி. தர்மலிங்கம்: சுதந்திரனுக்கு நீங்கள் கொடுத்த விளம்பரத்துக்காக எமது நன்றி!

[தேசிய அரசு பேரவையில்—7,12,77]

ஈழத்தில் வாழும் தமிழன் சிலவேளைகளில் தனது நாட்டு விடுதலை பற்றி மறந்து திசைமாறிப்போக எத்தனித்தாலும் வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள்—குறிப்பாக லண்டனில் தமிழ் ஈழ விடுதலையொன்றையே குறிக்கோளாக கொண்டு இயங்கும் தமிழ் ஈழ இளைஞர்கள் ஈழத் தமிழகத்தின் விடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய அளவுக்கு துடி துடிப்புடனும் செயலூக்கத்துடனும் இயங்கி வருவது விடுதலை நெஞ்சங்களுக்கு புத்துணர்வும் களிப்பும் ஊட்டுவதாக உள்ளது. இத்தகைய கடமையே கண்ணாகக் கொண்ட இளைஞர்களைப் பெற்றெடுத்த தமிழ் ஈழத்தின் விடுதலையை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்கிற தெம்பு நமக்கெல்லாம் ஏற்படுகிறது.

லண்டனில் தமிழ் ஈழத்தின் விடுதலையை மைய நோக்காகக் கொண்டு இயங்கிவரும் பல்வேறு இயக்கங்களில் வீரமும், செயலூக்கமும், களத்தில் இறங்கும் துணிவும் கொண்ட இளைஞர் இயக்கமாக விளங்குவது லண்டன் ஈழ விடுதலை இயக்கமாகும். நாள்தோறும் 24மணி நேரமும் ஈழத்தின் விடுதலை பற்றியே சிந்தித்து செயலாற்றும் வீர இளைஞர்களின் பாசறையாக லண்டன் ஈழவிடுதலை இயக்கம் இயங்கிவருகிறது. 'ஈழ விடுதலை' என்ற ஏட்டினையும் இந்த இளைஞர்கள் நடத்திவருகின்றனர்.

முன்னர் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தில் மறியல் போராட்டம் நடத்தி உலகின் கவனத்தை தமிழ் ஈழ விடுதலைக் கப் பத்திரிகைகளிலும் பிரசாரம் செய்வது, தமிழ்ஈழத்தின் தனிப்பெரும் விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் லண்டனுக்கும் வெளிநாடுகளுக்கும் செல்லும்போது, அவர்கள் இயக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளை அவர்களுக்கு செய்து கொடுப்பது, தேவை ஏற்படும்போது களத்தில் குதிப்பது, என்று பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈழ விடுதலை இயக்கம் உற்சாகத்துடன் ஈடுபட்டு வருகிறது.

அண்மையில் சாவகச்சேரி பா. உ. வி. என். நவரத்தினம் லண்டன் சென்றிருந்தபோது, அவரது நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து, பயனுள்ள பணியாக லண்டன் ஈழவிடுதலை இயக்கமே அமைத்துக் கொடுத்தது. அதேபோல மாறு இச் சங்கத்திடம் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுபோன்று இன்னும் பல சர்வதேச நிறுவனங்களின் உதவிகளையும் பண்டிதர் நாடினார். நோர்வேயிலுள்ள 'பேர்கன்' என்னும் இடத்தில் ஈழத்தமிழர் கழகம் நடத்திய கூட்டம் ஒன்றிலும் காவலூர் பா. உ. பண்டிதர் இரத்தினம் உரையாற்றினார்.

பண்டிதரின் மேற்படி நிகழ்ச்சிகள் அனைத்தையும் 'இலண்டன் ஈழ விடுதலை இயக்கமே திறம்படச் செய்து கொடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேபோல திரு. வி. என். நவரத்தினம் பா. உ. அவர்களும் தமது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தின்போது

# தமிழ் ஈழத்தின் விடுதலைக்கு லண்டனில் நம் இளைஞர்கள் ஆற்றிவரும் சிறப்புமிகு பணிகள்

லைப் போராட்டத்தின் பால் ஈர்த்ததும் அதன்பின் லண்டனில் களத்தில் இறங்கி பல்வேறு நேரடியான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதும் லண்டன் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என்பது தெரிந்ததே.

லண்டன் ஈழ விடுதலை இயக்கததினர் இறுதியாக 9-12-77ல் சர்வதேச மனித உரிமைதினத்தை முன்னிட்டு— ஈழத்தில் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுவதை உலக அரங்கில் புட்டுவைக்கும் நோக்குடன் லண்டனிலுள்ள ஐக்கியநாடுகள் சபை அலுவலகத்தின்முன் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

வெளிநாட்டு விடுதலை இயக்கங்களுடனும், வெளிநாட்டு அரசுகளுடனும் தொடர்புகொண்டு ஈழ விடுதலைக்கு ஆதரவும் அனுதாபமும் உதவியும் திரட்டுவது தமிழ் ஈழ விடுதலைகுறித்து உலக அரங்கிலும் உல

பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் லண்டன் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து கொடுத்ததும் இந்த இயக்கமே யாகும்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது வெளிநாட்டு விஜயத்தின்போது, சிங்கள வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிதி உதவி பெறுவதற்காக நோர்வே, ஜெர்மனி, பாரிஸ், ஜெனிவா, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்கு சென்றிருந்தார்.

நோர்வேயில் 'ரெட்பாஞர்' என்னும் சிறுவர் பாதுகாப்பு நிலையம் 15 இலட்சம் ரூபாவையும், உலக தேவாலய திருச்சபையின்நோர்வே பிரிவு 400 தமிழ் அகதிகள் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கென 20 இலட்சம் ரூபாவையும், வழங்க முன்வந்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஏற்கெனவே 500பவுண் ஸ்டேர்லிங் தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கென இலங்கைக்கு அனுப்பியுள்ளது. இன்னும் 6000 டாலர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் அனுப்பிவைக்கவுள்ளனர். மேலும் ஒரு இலட்சம் பவுண் தந்துதவு

இலண்டன், 'பல்கோரியா, டுபாய், ஜெனிவா, ஜெர்மனி, பாரிஸ், ஒல்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளுக்கு விஜயம்செய்து ஈழத்தமிழர் பிரச்சினையை உலகறியச் செய்ததுடன், தமிழ் அகதிகளுக்கு நிவாரண உதவி வழங்கும்படி சர்வதேச சங்கங்களை சந்தித்து வேண்டுகோள் விடுத்தார். நவம் அவர்களின் சுற்றுலா ஒழுங்குகளையும் இலண்டன் ஈழ விடுதலை இயக்கமே செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இலண்டனில் உள்ள ஈழத் தமிழர் அமைப்புக்களில் ஒன்றான ஈழ விடுதலை இயக்கம் இவ்வாறு பல்வேறு பணிகளையும் செய்து வருவது தமிழர் விடுதலைப் போருக்கு வலுவூட்டி வருகிறது. உழைக்க சென்ற இடத்திலும் தமிழ் ஈழத் தாயகத்தின் அடிமை நிலை துடைத்திட தம்மை அர்ப்பணித்துப் பம்பரமெனத் சுழன்று பணியாற்றிவரும் லண்டன் ஈழ விடுதலை இளைஞர்கள் ஏனைய நாடுகளிலுள்ள தமிழ் இளைஞர்களுக்கு ஓர் உதாரண புருஷர்களாக விளங்குகின்றனர்.

—சுதந்திரன் லண்டன் நிருபர் க. இளங்கோ.

## எங்கும் தமிழ்..

—7-ம் பக்கத் தொடர்

தீர்க்கமுயல்வதுதான்பெரும்பான்மை இனத்தவராகிய உங்கள் கடமையாகும். இதுவே இந்த நாட்டு மக்களுக்கு — சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுககும் — நீங்கள் செய்யும் பெரும் நன்மையாகும். இந்த நாட்டு மக்கள் ஒற்றுமையாக வாழ தமிழ்நாட்டுக்கொள்கையை —தமிழ் மக்களது தனிநாட்டுக்கொள்கையை நீங்கள் மதிப்பதுதான் நாட்டிற்கும் தமிழ் இனத்திற்கும் நல்லது.

சிக்கன சலவைக்கு
மில்க்வைற் பார் சோப்
வாங்கி உபயோகியுங்கள்
விலை ரூ. 1 . 80 சதம் மட்டுமே
10 மேலுறைகளை அனுப்பி ஒரு அழகிய பொலித்தீன் பாக்கை அல்லது 2 மேலுறைகளுக்கு அழகிய கலண்டரை பெற்றுக் கொள்ளுங்கள்
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எங்கும் தமிழ்ஈழம் என்பதே பேச்சு!"

## தேசிய அரசுப் பேரவையில் பண்டிதர் விடுதலை முழக்கம்!

"எங்கும் சுதந்திரம் என்பதேபேச்சு"என இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது பாரதி பாடியதுபோல், இன்று எங்கும் 'தமிழ் ஈழம்' என்பதே பேச்சும், மூச்சுமாகிவிட்டது. தனிநாடு கொள்கை எங்கள் உயிரோடு ஊனோடு கலந்துள்ளது. தனிநாடு அமைப்பதன் மூலமே எமது சுதந்திரத்தை மீட்டுக்கொள்ளமுடியும் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம்."

இவ்வாறு தேசிய அரசுப் பேரவையில் வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது பேசிய காவலூர் பா. உ. பண்டிதர் கா.பொ. இரத்தினம் விடுதலை முழக்கம் செய்தார். அவர் தமது பேச்சில் மேலும் கூறியதாவது:-

உண்மையைக் கூறினால் உடமபெல்லாம் நோகும் என்றுகூறுவார்கள், நாங்கள் பல ஆண்டுகளாக இந்தச் சபையிலும் சரி இச்சபைக்கு வெளியிலும் சரி உண்மையே கூறி வந்திருக்கிறோம்; உண்மைக்காக நாங்கள் போராடி வந்திருக்கிறோம். இதனால் தான் தமிழ் மக்கள் எங்களைத் தொடர்ந்து இங்கே அனுப்பிக்கொண்டு வருகின்றார்கள், சிங்கள மக்கள் ஒரு தேர்தலில் ஒரு கட்சிக்கு அதிகாரம் கொடுத்து பின்னர் அதை விழுத்தும் சூழ்நிலையில் நாம் கொள்கையை விற்காமல், கொண்ட கொள்கையை மாற்றாமல், உண்மைக்குப் புறம்பாகப் போகாமல் நேர்மையான முறையில் நடந்து வந்திருக்கிறோம். எனவேதான் நாம் எமது உள்ளத்தில்பட்டதை உண்மையென்று எண்ணுவதை — எங்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களுக்கும் நன்மை என்றுகருதுவதை அச்சம் இன்றி கூச்சம் இன்றி கூறிக்கொண்டு வருகின்றோம்.

இந்த அரசாங்கம் மிகப் பெரும்பான்மை வாக்குப் பெற்று மிகப்பெரும்பான்மையான தேர்தல் தொகுதிகளில் வெற்றிபெற்று வந்தபோது இந்த நாட்டு மக்கள் என்ன எண்ணினார்கள்? இந்த அரசாங்கம் நல்ல முறையில் அரசாங்கத்தை நடத்தும் என்ற எண்ணினார்கள். முன்னைய அரசுவிட்டபிழைகளைத் திருத்தும் என்றுஎண்ணினார்கள், ஆனால் உண்மையில் மிகவும் மனவருத்தத்துடன் கூறுகிறேன். இப்பொழுது மக்கள் எண்ணுகிறார்கள் இந்த அரசாங்கமும் முன்னைய அரசாங்கத்தின் வழியில் தான்போகின்றது என்று தமிழ் மக்கள் மட்டுமல்லாமல் இந்த அரசாங்கம் நல்ல தொண்டு புரியவேண்டும் என்று எண்ணுகின்ற சிங்கள மக்கள்கூட இன்று என்ன செய்கிறார்கள்? முன்னைய அரசாங்கம் போன வழியில் தான் இந்த அரசாங்கமும் போகத் தொடங்குகிறதோ என்று அவர்கள் சந்தேகப்படத் தொடங்கி இருக்கிறார்கள். எங்களைக் கேட்டால் இந்த அரசாங்கமும் சில அமைச்சர்களும் அந்த வழியில் தான் போய்விட்டார்கள் என்பதை உதாரணத்தோடு விளக்குவோம்.

சென்ற அரசாங்கம் இழைதத ஒரு பெரிய குறையை அப்போது எங்களுடன் எதிர்க்கட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியினரும் அன்று சுட்டிக் காட்டினார்கள். அதாவது சென்ற அரசாங்கத்தினர் தமிழ்த் தொகுதிகளில் பொதுவாக எதிர்க் கட்சியினரது தொகுதிகளில் எல்லாம் தங்களுடைய கட்சி அமைப்பாளர்களை நியமித்தார்கள். அமைப்பாளர்கள் மட்டுமல்ல, ஒரு தமிழ் அமைச்சரையும் தமிழ்ப் பகுதிகளுக்குத் தலைமை அமைப்பாளராக வைத்து ஒவ்வொரு தொகுதியிலும் அமைப்பாளர்களை நியமித்தார்கள். அந்த அமைப்பாளர்கள் தமிழ் மக்களையும் பிரித்து, தமிழ் மக்களில் ஒரு பகுதியினரை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அடிவருடிகளாக மாற்றிவிடலாமென்று முயன்றார்கள். அந்த அமைப்பாளர்களுக்கெல்லாம் நடந்தது என்ன? அவர்களுடைய வரலாறு இன்று ஒரு முடிந்த வரலாறாக இருக்கிறது.

எனவே, சென்ற அரசாங்கத்தின் காலத்திலே ஓர் உண்மையை சரித்திரம் நிலைநாட்டியிருக்கிறது. அமைப்பாளர்கள் என்ற போர்வையிலே எந்த அரசாங்கமும்— எந்தச் சிங்களக் கட்சிகளின் அரசாங்கமும் — தமிழர்களிடையே சிலரை உருவாக்கினால் அவர்கள் அந்தக் கட்சிக்கு எந்த விதத்திலும் உதவி செய்ய முடியாது. அப்படிச் செய்து தமிழ் மக்களைப் பிளவுபடுத்தவும் முடியாது, தமிழ் மக்களுடைய ஒரே ஒரு கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணிதான் என்பதை சென்ற ஏழு ஆண்டு கால வரலாறு காட்டியிருக்கிறது.

எனவே சலுகைகள் கொடுப்பதாலோ உத்தியோகங்கள் கொடுப்பதாலோ தமிழ் மக்களைத் திசைதிருப்பலாம் — தமிழ் மக்களைக் கொள்கை மாறச் செய்யலாம். தமிழர் விடுதலைக்கூட்டணியை [illegible] என்று எண்ணுவது பகற்கனவு என்பதை இனிமேலாவது ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்; நீங்கள் ஓர் உண்மையை ஏற்றுக் கொண்டால் உங்களால் எங்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியும். இன்று தமிழர் இடையே ஒரே ஒரு அரசியல் கட்சிதான் இருக்கின்றது. அதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியாகும்; இன்று தமிழ் மக்கள் உள்ளத்தில் ஒரே ஒரு அரசியல் கொள்கைதான் இருக்கிறது. அது தான் இனிப் பிரிந்து வாழவேண்டும் என்பது.

ஒரு கணவன் — மனைவி சண்டை அதைத் தீர்த்து வைக்கவேண்டியவர்கள்

## 'தனிநாடு கொள்கை எம் உயிரோடு கலந்தது!'

தீர்த்து வைக்கவில்லை; இன்னும் சண்டையை கூட்டினார்கள். நீதிமன்றத்திற்கு மனைவி போய் நாங்கள் பிரிந்து வாழப்போகிறோம் என்று பிரிவினை வழக்கும் போட்டாயிற்று. அதுவரை அவர்களைச் சமாதானம் செய்ய ஒருவரும் முன்வரவில்லை. அதுவரை அவர்களது குறைகளைக் கேட்கவில்லை. அதுவரை மனைவியை அடித்தார்கள்; உதைத்தார்கள். அவளுடைய நகைகளைப் பறித்தார்கள். வாயை மூடச்செய்தார்கள். இப்பொழுது சமாதானம் பேசுகிறார்கள் இதைப்போலவே தமிழ் மொழி உரிமையைப் பறித்து தமிழ் இனத்தின் வாயைக் கட்டினார்கள். தம்ழ் மக்களுக்கு சிங்களக் கடிதம் அனுப்பி அவர்களை அறிவில்லாதவர்களாக்கினர். இதெல்லாம் செய்யப்பட்டபோது நாம் கூக்குரல் இட்டபொழுது—நாம் ஓலம் இட்ட பொழுது சிறிதும் திரும்பிப்பாராமல் நீங்கள் எக்கேடு கெட்டாலும் நாங்கள் பெரும்பான்மை இனம் உங்களை அடக்கியே ஆளுவோம்; நாம் வைத்ததே சட்டம் என்று சென்ற இருபது ஆண்டுகளாக எங்களைச் சிறுமைப்படுத்திவிட்டீர்கள்.

இப்பொழுது தமிழ் மக்கள் என்ன சொல்கிறார்கள். இனி ஒற்றுமையான வாழ்வு வேண்டாம் என்கிறார்கள். [illegible] களுக்குரிய ஒரே ஒரு வழி என்று அந்த வழிக்கு தமிழ் மக்களை உந்தத் தக்கதாக முன்னைய அரசாங்கங்கள் நடந்துகொண்டுள்ளன. இன்று பிரிந்து வாழ்வதையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். அது அவர்களது ஊனோடு உயிரோடு கலந்த கொள்கையாகி விட்டது. இந்தக் கொள்கையில் எமது இளைஞர்கள் இப்பொழுது தீவிரமாக இருக்கிறார்கள். இந்தக் கொள்கைக்காக உயிர்கொடுத்துப்போராடுவோம் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

இரத்தம் சிந்தாமல் நாம் ஒற்றுமையாக வாழ முயல்கிறோம். ஒற்றையாட்சியில் கூட நாம் வாழ முயன்றோம். பின்னர் சமஷ்டி ஆட்சி கேட்டோம். சமாதானமாக வாழ இரண்டு சிங்களக் கட்சிகளோடு உடன்படிக்கை செய்தோம்; சமத்துவமாக வாழ எண்ணினோம். இவையெல்லாம் எமக்கு ஏமாற்றமே அளித்தன.

இந்த நாட்டில் சிங்கள மக்கள் தங்களைத் தாங்கள் ஆள்கிறார்கள். அவர்களுக்கு அரசு இருக்கிறது. கட்சிகள் மாறலாம்; ஆனால் அவர்களுக்கு அரசு இருக்கிறது. அவர்களுக்கு தேவைகள் நிறைவேற்றப்படல் வேண்டும், ஆனால் எங்களுக்கு வேண்டப்படுவது உரிமையே. உரிமைகள் வந்த பிறகுதான் நாங்கள் தேவைகளுக்காகப் பாடுபடுவோம். ஆகவே, உரிமைகளுக்காகப் பாடுபடும் எங்களை உங்களோடு ஒப்பிட முடியாது.

உங்களில் சிலரைத் திருப்திப்படுத்த சில பச்சோந்தித் தமிழர்களை நீங்கள் அமைப்பாளர்களாக கைப்பொம்மைகளாக வைத்திருக்கலாம். இந்த அரசாங்கத்தையோ முன்னைய அரசாங்கத்தையோ சிங்கள அரசு என்று எந்தத் தமிழனும் கூற முடியுமே தவிர எங்கள் அரசாங்கம் என்று கூற முடியாது. பயப்படுத்தி இந்த மனநிலையை நீங்கள் மாற்ற முடியாது இனக்கலவரம் வரும்—இரத்த ஆறு ஓடும் என்று சொல்லி இந்த மனநிலையை நீங்கள் மாற்ற முடியாது. அடிபட்டு, அனுபவித்து அனுபவித்து இறுதியில் நாங்கள் இந்த முடிவுக்கு வந்துவிட்டோம்.

நாங்கள் எங்களுடைய கொள்கையைச் சொல்லிவிட்டோம். தமிழ் மக்கள், கடந்த தேர்தலிலே, தனிநாடுதான் தங்களுடைய கொள்கை என்று எங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். நீங்களும்கூட உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்திலே, தமிழ் மக்களுக்குத் தொல்லைகள் இருக்கின்றன —குறைகள் பல இருக்கின்றன— தமிழ் மக்களுடைய இந்தக் குறைகள் நீக்கப்படத்தான் வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படிச் சொல்லியிருக்கிறீர்களேயொழிய இந்த 123 நாட்களும் நீங்கள் செய்தவற்றால் தமிழர்கள் இன்னும் எந்த நன்மையையும் அடையவில்லை. அவர்களுடைய உரிமை கிடைக்கவில்லை— அவர்களுடைய பிறப்புரிமை கிடைக்கவில்லை. அவர்கள் இன்றும் இரண்டாந்தரப் பிரசைகளாகத்தான் இருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையிலே ஒவ்வொரு இனத்துக்கும் கொடுக்கப்பட்ட சுயநிர்ணய உரிமையைத்தான் நாங்கள் கேட்கிறோம். உலகத்திலே இல்லாததொன்றை நாங்கள்கேட்கவில்லை, உலகத்திலே மற்ற மக்கள் கேட்காததை நாங்கள் கேட்கவில்லை, இயற்கைக்கு விரோதமாக நாங்கள் எதையும் கேட்கவில்லை. நாங்கள் கேட்பதெல்லாம், எங்களை மானத்தோடு வாழவிடுங்கள்—உங்களைப்போல எங்களையும் வாழவிடுங்கள் என்பதுதான். இதைத்தான் நாங்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாகக் கேட்டுவருகிறோம். ஆனால், நீங்களோ எங்களைப் பிளவுபடுத்தி, எங்களை அழித்து எங்கள் கட்சியைஒழிக்க எண்ணுகிறீர்கள், அதுமுடியாதென்பதை வரலாறு நிருபித்திருக்கிறது. இந்த உண்மையை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இந்த நாட்டிலே சிங்கள மக்களும் தமிழ் மக்களும் அமைதியாக வளத்துடன் நல்லுறவுடன் வாழவேண்டுமெனில் தமிழ் மக்களின் அரசியற் கொள்கையை—அவர்களுடைய ஊனோடும் உயிரோடும் கலந்துள்ள தனிநாட்டுக்கொள்கையை அவர்கள் அடையவேண்டுமென்பதை சிங்கள மக்களும் தலைவர்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

''எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு'! என்று பாரதியார் பாடினார். "எங்கும் ஈழம்என்பதேபேச்சு" என்று கவிஞர்கள் பாடும் அளவிற்கு ஈழக்கொள்கை வேரூன்றிவிட்டது. இந்தப் பேரவையின் உறுப்பினர்களின் உள்ளத்திலும் அது இடம் கொண்டுவிட்டது. இங்கு பேசிய பல உறுப்பினர்கள் தனிநாட்டுக்கொள்கையை ஈழக் கொள்கையைத் தொடாமல் விடவில்லை.

இந்த தனிநாட்டுக்கொள்கை விநோதமான கொள்கை அன்று, இது சுதந்திரப் போராட்டம். வரலாற்றுக்கு —மக்களின் விடுதலை வேட்கைக்கு சுயநிர்ணய உரிமைக்கு இயைந்த ஒன்றேயாகும், எங்களைப்போலவே சைப்பிரசிலுள்ள துருக்கியர்களும், கியூபெக்கிலுள்ள பிரெஞ்சு மக்களும், பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள மக்களும், ஸ்பானியாவிலுள்ள பாஸ்க் இன மக்களும், எதியோபியாவிலுள்ள எரிற்றியா மக்களும் தனியாட்சி பெறப் போராடி வருகிறார்கள். எனவேவீரம் பேசுவதை நிறுத்தி மோதலைத் தவிர்த்து வகுப்புக் கலவரப்பூதத்தைக் காட்டி அச்சுறுத்தாமல் துட்டகைமுனு, பராக்கிரமபாகு முதலிய மன்னர்களின் பெயரை உச்சாடனம் செய்யாமல் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் உங்கள் அபிலாசைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் கொடுக்கும் மதிப்பைக் கொடுத்துமலேசியா, கனடா பிரித்தானியா முதலிய நாடுகளில் நடந்ததை.நடப்பதை —எண்ணிப்பார்த்து தமிழ் மக்களின் பிரச்சினைகளைத்

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

## நான்கு சிங்கள—

—1-ம் பக்கத் தொடர்

இங்கிருந்து கொழும்புக்கு ஓசியில் ரயிலேறிச் சென்று மந்திரி பிரேமதாசாவிடம் புகார் செய்து, மந்திரியைக் கொண்டே அங்கிருந்து டெலிபோனில் உத்தரவு போடச் செய்து யாழ்ப்பாணத்தில் பணம் எடுக்குமளவுக்கு சிங்களவர்கள் தாம் ஆளும் இனம் என்ற திமிருடன் நடந்து கொண்டது பழைய விஷயம்.

அமைச்சரும், அரசாங்க அதிபரும் உதவிநிதி வழங்குவதில் ஒரு நெறி முறையை கையாளாது, 'கேட்டுவரும் சிங்களவருக்கெல்லாம் அள்ளிக் கொடு' என்ற எழுதாத சட்டத்தை அமுல்படுத்திய தன் விளைவாக இப்போது நிலைமை கட்டுமீறி விட்டதாக தெரிகிறது. ஒரு குடும்பத்துக்கு ரூபா 850/- வழங்குவது என்பது தான் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் ஆனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிங்களவர்கள் ஆண்களும் பெண்களும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் பல 850/- ரூபாக்களை சுளை சுளையாக இதுவரை கறந்து கொண்டு விட்டார்களாம். இதன்படி பல பாதிக்கப் படாத சிங்களக் குடும்பங்கள் ஏறத்தாழ 5000 ரூபா வரை சுருட்டி விட்டதாம். இந்த உண்மை இப்போது அம்பலத்துக்கு வந்து சில அதிகாரிகள் திடுக்கிடுகிறார்கள். இன்னும்சிலர் திடுக்கிடுவது போல பாவனை பண்ணுகிறார்கள்.

தமிழர்களின் சொத்துக்களை சூறையாடிக் கொள்ளையடித்த சிங்களவர்கள், இப்போது தமிழ் அகதிகளின் நிலைகண்டு அவர்களது துயர் துடைத்திட வெளிநாடுகள் வழங்கிய நிதியையும் ஏனைய உதவிகளையும் கூட சுரண்டுவதிலும் சூறையாடுவதிலும் முன்னிற்பது சிங்கள இனத்துக்கே ஒரு பெரிய தலைகுனிவு ஆகும்.

இது இப்படியிருக்க, சிங்களவர்களுக்கு படிவம் நிரப்பிக் கொடுத்தவுடன்உதவிப் பணம் கிடைப்பதை அறிந்த சில கிராம சேவகர்கள், இச்சந்தர்ப்பத்தைபயன்படுத்தி கையூட்டு மூலம் பெரும் பணம் சம்பாதித்துவிட்டார்களாம். அதாவது தம்மிடம் வரும் பாதிக்கப்படாத சிங்களவர்கள் அனைவருக்கும் பாதிக்கப்பட்டதாகசிபார்சு செய்து கொடுத்து விட்டு, அவர்கட்கு கிடைக்கும் பணத்தில் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை பெற்றுக் கொண்டு விடுகிறார்கள். அதே சமயம் உண்மையில் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகள் போனால் பாய்ந்து விழுகிறார்களாம். காரணம் தமிழர்கள் கையூட்டு கொடுப்பதற்கு மறுப்பது தான். இப்படிப்பட்ட சமூகத் துரோகிகளான கையூட்டு விதானைகள் பற்றி இலஞ்ச ஆணையாளர் அலுவலகத்துக்கும் இதுவரை புகார் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது; இப்படிப்பட்டவர்கள் தங்களது இந்த இழிவு வேலையை உடன் நிறுத்தாவிடின் இவர்களைப் பற்றி மேலும் பல தகவல்களை சுதந்திரன் அம்பலத்துக்கு கொண்டுவரவிருக்கிறது!

பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு நிவாரண உதவிவழங்குவதில் ஒழுங்கீனம் ஏற்படாத முறையில் ஒரு சீரான திட்டம் புகுத்தப்படாததால் உண்மையில் பாதிப்புக்குள்ளானவர்கள் உள்ளம் குமுறி நிற்க, பாதிக்கப்படாதவர்கள் உதவி நிதியை சுரண்டிக்கொண்டு போகின்றனர், வெளியூரிலிருந்து சிங்களவர்கள் யாழ்ப்பாணத்துக்கு படையெடுத்து வந்து பணம் பெற்றுச்செல்கின்றனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தற்போது எந்தெந்தப் பகுதியில்வாழுகின்றனவோ, அந்தந்தப்பகுதி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அவரவர்களுக்குரிய உதவித் தொகையை பெற்றுக்கொள்வதற்கு முன்னரே வழிவகை செய்திருந்தால்—அதாவது 'உதவித்தொகை வழங்கும் இடங்களை காரியாதிகாரி பிரிவு அடிப்படையில் பரவலாக்கியிருந்தால் பல ஒழுங்கீனங்களைத் தவிர்த்திருக்கலாம்! அனைவருக்கும்—உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு—உதவி கிடைத்திருக்கும்!

கடைசியாக கிடைத்த செய்தியின்படி— கோப்பாய் பா. உ. சி. கதிரவேற்பிள்ளை யாழ் அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தியதின்பேரில், ஏற்கெனவே விண்ணப்பித்திருந்த தமிழர்கள் அனைவருக்கும் 15-12-77ல் உதவித் தொகை வழங்கப் படுமென உறுதி அளிக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது


கிங்ஸ்லி (கொழும்பு) 5-வது வாரம்

கமலஹாசன், ரஜனிகாந்த், ஸ்ரீதேவி, விஜயா நடித்த-

கே. பாலச்சந்தரின்

மூன்று முடிச்சு

கெப்பிட்டல் (கொழும்பு)

ஜெய்சங்கர், —நடித்த—

வல்லவன் ஒருவன்

(புதிய கொப்பி)

லிடோ (யாழ்ப்பாணம்) 10-வது வாரம்

எம். ஜி. ஆர்., லதா நடித்த —

நீதிக்கு தலை வணங்கு

(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்நகர்)

முத்துராமன், சுஜாதா — நடித்த —

முத்தான முத்தல்லவோ

விஜயா (மட்டுநகர்)

முத்துராமன், சுஜாதா —நடித்த

வாழ்ந்து காட்டுகிறேன்

6-வது வாரம்

செல்லமகால் (கொட்டாஞ்சேனை)

சிவாஜி, ஜெமினி, லக்ஷ்மி, நாகேஷ், சுந்தரராஜன், வீ. கே. ராமசாமி

மற்றும் பலர் நடித்த

உனக்காக நான்

கெயிட்டி [கொட்டாஞ்சேனை] 2வது வாரம்

எம். ஜி. ஆர்., மனோகர், பத்மினி, ஈ. வி. சரோஜா, ரி. கே. மதுரம் நடித்த-

அரசிளங்குமரி

(புதிய கொப்பி)

றீகல் (மட்டுநகர்) 6வது வாரம்

ஜெயசங்கர் -நடித்த

துணிவே துணை


இப்பத்திரிகை கொழும்பு -12, 194ஏ, பண்டார நாயக்க வீதியிலிருக்கும் [illegible] நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. [illegible] பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org